ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2409 - 2024 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2024.11.01

*2409 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 190 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 08ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

189- B 082623- 353 (2024/11)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்

### மாரவில மாவட்ட நீதிமன்றம்

மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், இலக்கம் 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு -02.

வழக்கு இலக்கம்: 345/MB
நிறைவேற்றல் இலக்கம்: 51/2024

முறைப்பாட்டாளர்

எதிர்

1. மெத்தசிங்க ஆரச்சிகே அன்டனி செபஸ்தியன் பர்னாந்து ( மரணமடைந்த)

இலக்கம் 29/6, உ/சிறிகம்பல, லுணுவில

1. (அ) மெத்தசிங்க ஆரச்சிகே சதுரி சாமினி பர்னாந்து, இலக்கம் 29/6, உ/சிறிகம்பல, லுணுவில

1. (ஆ) மெத்தசிங்க ஆரச்சிகே சமரி சாமினி பர்னாந்து, இலக்கம் 4/75, சந்தானபுர, லுணுவில

1. (இ) மெத்தசிங்க ஆரச்சிகே சமிலா சாந்தனி பர்னாந்து, இலக்கம் 1/252, சென் மரினோ கார்டன்ஸ் பஹல ஹத்தினிய, மாரவில

2. மெத்தசிங்க ஆரச்சிகே சரித் சதுரங்க பர்னாந்து, இலக்கம் 29/6, உ/சிறிகம்பல , லுணுவில

பிரதிவாதி

மாரவில மாவட்ட/ நீதவான் நீதிமன்றத்தில் 2024.02.26 ஆந் திகதி வெளிப்படுத்தப்பட்ட இணக்க தீர்வை பிரகாரம் 345/ MB இனைக் கொண்ட வழக்கிற்காக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள் உடன்பட்ட ரூ. 1, 944,460.50 பணத்தினைச் செலுத்துவதைத் தவறவிட்டு பிரதிவாதி சேர்ந்திணங்குவதை மீறியுள்ளதால் மேற்படி சேர்ந்திணங்குவதற்கு அமைவாக முறைப்பாட்டின் வேண்டுதலில் காட்டப்பட்டுள்ளவாறு பிரதிவாதியிடமிருந்து அறவிட வேண்டிய சட்டத்திற்கு ஏதுவாகக் கோருவதன் அடிப்படையில் 2018.06.01 ஆந் திகதிக்கு ரூ. 1,077,691.83 இனைக் கொண்ட பணத்தொகை மற்றும் ரூ.1, 077, 691.83 இனைக் கொண்ட பணத் தொகையின் மீது 2018.06.01 ஆந் திகதி முதல் 11.5 % வருடாந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் முழுத் தொகையையும் செலுத்தும் திகதி வரை வட்டி மற்றும் ஏலவிற்பனை கட்டணம் என்பவற்றை அறவிட்டுக்கொள்ளுவதற்காக இந்த நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு நிறைவேற்றல் கட்டளைக்கு அமைவாகத் தடைசெய்யப்பட்டுள்ள இதன் கீழ் அட்டவணையில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அசையா ஆதனத்தின் அந்தப் பிரதிவாதிகளுக்கு உரிமையான அனைத்து உரித்துகள் மற்றும் உரிமைகள்,

2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 அந் திகதி மு.ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பது அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பதிவாளர்/ பிரதி பிசுக்கால்.

**காணிக்குள் பிரவேசித்தல்** : வென்னப்புவ சந்தியிலிருந்து வென்னப்புவ- கிரிமெட்டியான பாதையில் சுமார் 2.9 கி.மீ. பயணம் செய்து லுணுவில சந்தியை அடையலாம். அதன் பின்னர் இடது பக்கம் திரும்பி சிறிகம்பொல பாதைக்குச் சென்று பிரதீபா விளையாட்டு மைதானத்தை கடந்து சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் வலதுபக்கம் சிறிகம்பல தேவாலயம் வரை பயணம் செய்யவும். இந்த இடத்திலிருந்து பிஷொப் எட்மன் பீரிஸ்

மாவத்தைக்குத் வலதுபக்கம் திரும்பி சுமார் 900 மீற்றர் இந்தப் பாதையில் பயணம் செய்து இடதுபக்கம் திரும்பி லான்ஸ் பொம்பாடியர் டி. ஏ. ஷஹொன் தனுஸ்க தேனுவர ரனவிரு மாவத்தைக்குப் பிரவேசிக்கவும். அதன் பின்னர் சுமார் 20 மீற்றர் முன் சென்று இடது பக்க பாதைக்குத் திரும்பி இன்னும் சுமார் 50 மீற்றர் பயணம் செய்து வலது பக்கம் உள்ள பிரதேச சபை பாதையை அடைய முடியும். அதன் பின்னர் இந்தப் பாதையில் வலதுபக்கம் திரும்பி சுமார் 150 மீற்றர் பயணம் செய்யவும். பிணைப்பொறுப்பு ஆதனம் இந்தப் பாதையை நோக்கி வலதுபக்கம் அமைந்துள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், மாரவில காணி பதிவு செய்யும் பிரிவுக்கு உரிய, தெற்கு பிட்டிகல் கோறளை, ஓதர பகுதி எனக் காட்டப்பட்டிருந்தாலும், வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குள், வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரிய, லுணுவில கிராம அலுவலர் பிரிவுக்கு உரிய லுணுவில என்ற பெயருள்ள கிராமத்தில் அமைந்துள்ள, கிரிமெட்டியானவத்த இலக்கம் 06 என்ற பெயருடைய காணிக்கு, சர்வே ஜெனரல் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் பு 3247 இனைக் கொண்ட அளவை வரை படம் பிரகாரம் லொட் இலக்கம் 53 இனைக் கொண்ட காணி பிரிவுக்கு எல்லைகள் .-

வடக்கிற்கு: துண்டு இலக்கம் 50 இனைக் கொண்ட காணிப் பகுதியும்;
கிழக்கிற்கு: துண்டு இலககம் 51 மற்றும் 52 இனைக் கொண்ட காணிப் பகுதிகளும்;
தெற்கிற்கு: துண்டு இலக்கம் 56 இனைக் கொண்ட காணிப் பகுதியும்;
மேற்கிற்கு: துண்டு இலக்கம் 10 இனைக் கொண்ட காணிப் பகுதியும்.

என்ற எல்லைக்குள் உள்ள அளவில் ஒன்பது தசம் எட்டு எட்டு பேர்ச் (0ஏ.0றூ. 9.88பே.) அதாவது பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஐந்து ஹெக்டயார் ( 0.025ஹெ.) கொண்ட பெரிய காணியில் தரை மற்றும் அதற்கு உரிய மரம், செடி கொடிகள், பழங்கள், கட்டிடங்கள் போன்ற சகலவித பொருட்கள் அனைத்தும் இத்துடன் இருக்கின்றன. இது மாரவில காணி பதிவாளர் அலுவலகத்தில் ஜீ/வென்/10/72 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி கீழுள்ளவாறு மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட லுணுவில கிராம அலுவலர் பிரிவுக்கு உரிய லுணுவில என்ற பெயருடைய கிராமத்தில் அமைந்துள்ள கிரிமெட்டியானவத்த இலக்கம் 06 என்ற பெயருடைய காணிக்கு டபிள்யூ. லக்ஷ்மன் எச். பர்னாந்து அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2015.02.18 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 12517 இனைக் கொண்ட அளவை வரைபடத்தின் பிரகாரம் லொட் இலக்கம் 01 இனைக் கொண்ட காணிப் பிரிவுக்கு எல்லைகள்.-

வடக்கிற்கு: இலக்கம் பி.பி.பு. 3247 இனைக் கொண்ட அளவை வரைபடத்தின் பிராகாரம் லொட் இலக்கம் 50 இனைக் கொண்ட பகுதியும்;
கிழக்கிற்கு: இலக்கம் பி.பி.பு. 3247 இனைக் கொண்ட அளவை வரைபடத்தின் பிராகாரம் லொட் இலக்கம் 51 மற்றும் 52 இனைக் கொண்ட பகுதியும்;
தெற்கிற்கு: இலக்கம் பி.பி.பு. 3247 இனைக் கொண்ட அளவை வரைபடத்தின் பிராகாரம் லொட் இலக்கம் 56 இனைக் கொண்ட பகுதியும்;
மேற்கிற்கு: இலக்கம் பி.பி.பு. 3247 இனைக் கொண்ட அளவை வரைபடத்தின் பிராகாரம் லொட் இலக்கம் 10 இனைக் கொண்ட பிரதேச சபை பாதையும்.

என்ற எல்லைகளுக்குள் உள்ள அளவில் ஒன்பது தசம் ஒன்பது (0ஏ.0றூ.9.9.பே.) அதாவது பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஐந்து பூச்சியம் ( 0.0250ஹெ.) கொண்ட பெரிய காணியில் தரை மற்றும் அதற்கு உரிய மரம் செடிகொடிகள், பழங்கள், கட்டிடங்கள் போன்ற சகலவித பொருட்கள் அனைத்தும் இத்துடன் இருக்கின்றன.

காணியின் அளவு: 00ஏ.00றூ.9.9பே.

பதிவாளர்/பிரதி பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
மாரவில,
2024, ஒற்றோபர் 09.

11- 57

## பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்

### மாரவில மாவட்ட நீதிமன்றம்

மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், இலக்கம் 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு -02.

வழக்கு இலக்கம் : 391/MB
நிறைவேற்றல் இலக்கம்: 52/2024

முறைப்பாட்டாளர்

எதிர்

சேனாதீரகே பிரியந்தி நிர்மலீ,
இலக்கம் 166, இரண்டாம் ஒழுங்கை, சிறிகம்பல குடியேற்ற திட்டம், லுணுவில

மேற்குறிப்பிட்ட பிரதிவாதியின் அற்றோணி தத்துவக்காரர் என்ற வகையில், வில்லப் பிரான்சிஸ்குகே ரஞ்சனி சோவிஸ், இலக்கம் 166, இரண்டாம் ஒழுங்கை, உதாசிறிகம, லுணுவில.

பிரதிவாதி

மாரவில மாவட்ட/நீதவான் நீதிமன்றத்தில் 2023.05.17 ஆந் திகதி வெளிப்படுத்தப்பட்ட ஒருபக்கமான தீர்ப்பின் பிரகாரம் 391/MB இனைக் கொண்ட வழக்கிற்காக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதியிடமிருந்து முறைப்பாட்டாளர் அறவிடவேண்டிய 2019.11.15 ஆந் திகதிக்கு ரூ. 2,857,525.52 இனைக் கொண்ட பணத்தொகை மற்றும் ரூ.2,349, 746.05 இனைக் கொண்ட பணத் தொகையின் மீது 2019.11.15 ஆந் திகதி முதல் 18.5 % வருடாந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் முழுத் தொகையையும் செலுத்தத் தவறியுள்ளதால் மேற் குறிப்பிட்ட ஒரு பக்கமான தீர்ப்பின் பிரகாரம் முறைப்பாட்டாளரின் வேண்டுதலில் காட்டப்பட்டுள்ளவாறு பிரதிவாதியிடமிருந்து முறைப்பாட்டாளர் அறவிட வேண்டிய 2019.11.15 ஆந் திகதிக்கு ரூ.2, 857,525.52 இனைக் கொண்ட பணத்தொகை மற்றும் ரூ 2,349,746.05 இனைக் கொண்ட பணத்தொகையின் மீது 2019.11.15 ஆந் திகதி முதல் 18.5% வருடாந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் முழுத் தொகையையும் செலுத்தும் திகதி வரை வட்டி மற்றும் ஏலவிற்பனை கட்டணம் என்பவற்றை அறவிட்டுக்கொள்ளுவதற்காக இந்த நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு நிறைவேற்றல் கட்டளைக்கு அமைவாகத் தடைசெய்யப்பட்டுள்ள இதன் கீழ் அட்டவணையில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தில் அந்தப் பிரதிவாதிக்கு உரிமையான அனைத்து உரித்துகள் மற்றும் உரிமைகள்.

2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பது அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பதிவாளர்/ பிரதி பிசுக்கால்.

**காணிக்குள் பிரவேசித்தல்** : வென்னப்புவ மத்தியிலிருந்து கொழும்பு- புத்தளம் A3 பாதையில் 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சூசை பாதை வரை பயணம் செய்து, அப் பாதையில் வலது பக்கம் திரும்பி சுமார் 600 மீற்றர் முன்னோக்கிச் சென்று சந்திக்கும் சனசமூக நிலைய பாதையில் சுமார் 100 மீற்றர் சென்று மீண்டும் வலதுபக்கம் திரும்பி 150 மீற்றர் செல்லும்போது வலதுபக்கம் பிணைப்பொறுப்பு ஆதனம் அமைந்துள்ளது.

### மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், மாரவில காணி பதிவு செய்யும் பிரிவுக்கு உரிய, தெற்கு பிட்டிகல் கோறளை, கம்பல் பத்துவே, வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரிய, வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குள், வடக்கு கொலின்ஜாடிய கிராம அலுவலர் பிரிவுக்கு உரிய கொலின்ஜாடிய என்ற பெயருள்ள கிராமத்தில் அமைந்துள்ள சியம்பலாகஹவத்த, ஹிக்ககஹவத்த, கஜுகஹவத்த, மோலவத்த என்ற பெயருள்ள காணிக்கு எஸ்.பி.ரணசிங்க அதிகாரம் பெற்ற அளவையாளர் அவர்களால் 2006.08.08 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2602 இனைக் கொண்ட அளவை வரைபடம் பிரகாரம் லொட் இலக்கம் 67 இனைக் கொண்ட காணி பிரிவுக்கு எல்லைகள்.-

வடக்கிற்கு: மேற்குறிப்பிட்ட அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 69 இனைக் கொண்ட 6.0 அகல பாதை;
கிழக்கிற்கு: மேற்குறிப்பிட்ட அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 68 இனைக் கொண்ட வென்னப்புவ பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிலமும்;
தெற்கிற்கு: பி. ஜெராட் பர்னாந்து மற்றும் ஏனைய உரித்து காணியும்;
மேற்கிற்கு: மேற்குறிப்பிட்ட அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 49 இனைக் கொண்ட பகுதியும்.

என்ற இங்கு குறிப்பட்ட எல்லைகளுக்குள் உள்ள அளவில் ஒரு றூட் பூச்சியம் தசம் எட்டு பூச்சியம் பேர்ச் (1ஏ.0றூ. 0.80பே.) இனைக் கொண்ட பெரிய காணியில் நிலம் மற்றும் அதற்கு உரிய மரம், செடி கொடிகள், பழங்கள், கட்டிடங்கள் போன்ற சகலவித பொருட்கள் அனைத்தும் இத்துடன் இருக்கின்றன. இது மாரவில காணி பதிவாளர் அலுவலகத்தில் G/108/259 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட காணி கீழுள்ளவாறு மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட கொலின்ஜாடிய என்ற பெயருடைய கிராமத்தில் அமைந்துள்ள சியம்பலாகஹவத்த, கஜுகஹவத்த, ஹிக்கஹாவத்த மற்றும் மோலவத்த என்ற பெயருள்ள காணிக்கு டபிள்யூ. எல்.எச். பர்னாந்து அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2012.03.20 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 10710 இனைக் கொண்ட அளவை வரைபடத்தின் பிரகாரம் லொட் இலக்கம் 01 இனைக் கொண்ட காணிப்பிரிவுக்கு எல்லைகள்.-

வடக்கிற்கு: எஸ். ஜி ரணசிங்க அதிகாரம் பெற்ற அளவையாளர் அவர்களின் இலக்கம் 2602 இனைக்கொண்ட அளவை வரைபடத்தின் லொட் இலக்கம் 69 இனைக் கொண்ட பாதையும்;
கிழக்கிற்கு: எஸ். ஜி ரணசிங்க அதிகாரம் பெற்ற அளவையாளர் அவர்களின் இலக்கம் 2602 இனைக்கொண்ட அளவை வரைபடத்தின் லொட் இலக்கம் 68 இனைக் கொண்ட பகுதியும்;
தெற்கிற்கு: பி. ஜெராட் பர்னாந்து மற்றும் ஏனைய உரிமையுள்ள காணியும்;
மேற்கிற்கு:எஸ். ஜி ரணசிங்க அதிகாரம் பெற்ற அளவையாளர் அவர்களின் இலக்கம் 2602 இனைக்கொண்ட அளவை வரைபடத்தின் லொட் இலக்கம் 49 இனைக் கொண்ட பகுதியும்;

என்ற எல்லைகளுக்குள் உள்ள அளவில் ஒரு றூட் பூச்சியம் தசம் எட்டு பூச்சியம் (0ஏ.1றூ.0.80பே.) இனைக் கொண்ட பெரிய காணியில் நிலம் மற்றும் அதற்கு உரிய மரம் செடிகொடிகள், பழங்கள், கட்டிடங்கள் போன்ற சகலவித பொருட்கள் அனைத்தும் இத்துடன் இருக்கின்றன.

காணியின் அளவு: 00ஏ.01றூ.0.80பே.

பதிவாளர்/பிரதி பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
மாரவில,
2024, ஒற்றோபர் 09.

11- 58

---

**பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்**

**கொழும்பில் ( நடாத்தப்படும்) மேல் மாகாண ( சிவில்) மேல் நீதிமன்றம்**

கொழும்பு 03, காலி வீதி, இல.450 எனும் நிரந்தர முகவரியையும் மற்றும் / அல்லது பிரதான வணிக வியாபாரத்தை நடாத்திச் செல்லும், மினுவங்கொடை, வெயங்கொடை பாதை, இல. 42 எனும் முகவரியில் “மினுவங்கொடை கிளை” என்று அறியப்படும் கிளை

வழக்கு இலக்கம் :
CHC/ 00352/ 2016/MR
பெறுமதி: ரூபா 8,715, 050.85
தன்மை: ஈடு
செயல்முறை: முறையானது
தடை உத்தரவு இல.: 14/2024

அலுவலகத்தைக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி. (Pan Asia Banking Corporation PLC)

*வழக்காளி*

*எதிராளி*

நிஷாந்த சிந்தக்க கித்சிறி ரில்லபல லியனகே,
(N.L. ஒட்டோ டிரேடர்ஸ் எனும் பெயர் வியாபாரத்தை நடாத்திச் செல்பவர்)
இல.167, வேலுவன பாதை, தெமட்டகொட, கொழும்பு 09.

*எதிராளி*

2022.10.21 ஆந் திகதிய கொழும்பு சிவில் மேல் நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்பின் பிரகாரம், வழக்காளியினால் எதிராளியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் வசதியின் மீது ரூபா 3,152, 897.59 பணத்தொகையும் மற்றும் முழுத்தொகையையும் முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2016.04.05 ஆந் திகதியிலிருந்து ரூபா 3, 000,000 பணத்தொகைக்கு 20.5% வருடாந்த வட்டியுடன் மற்றும் ரூபா 5,562, 153.26 பணத்தொகையும் மற்றும் 2016.04.01 ஆந் திகதியிலிருந்து அப்பணத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை ரூபா 5,562, 153.26 பணத்தொகைக்கு 16.50% வருடாந்த வட்டியுடன் வழக்காளிக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும்,

ரூபா 3,152, 897.59 பணத்தொகை மற்றும் முழுப்பணத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை, 2016.04.05 ஆந் திகதியிலிருந்து ரூபா 3,000,000 பணத்தொகைக்கு 20.5% வருடாந்த வட்டியுடனும் மற்றும் ரூபா 5,562, 153.26 பணத்தொகை மற்றும் 2016.04.01 ஆந் திகதியிலிருந்து அப்பணத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை ரூபா 5,562, 153. 26 பணத்தொகைக்கு 16.50% வருடாந்த வட்டியுடன் அறவிடுவதற்கு என்னால் தடைசெய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு D.C.M. ராஜபக்ஷ அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.08.27 ஆந் திகதிய 1838 ஆம் இலக்க ஈட்டுமுறியின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து.

2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு என்னால் தடைசெய்யப்பட்ட கோனகஹ II இல் இல. 219A கிராம அலுவலர் பிரிவின் கோனகஹ கிராமத்தில் அமைந்துள்ள “கொஸ்கஹவத்த மற்றும் கோனகஹவத்த” என்று அறியப்படும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, ராகம்பத்து, கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவு, கோனகஹ II இல. 219 A கிராம அலுவலர் பிரிவின் கோனகஹ கிராமத்தில் அமைந்துள்ள “கொஸ்கஹவத்த மற்றும் கோனகஹவத்த” எனும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் S.H. மெரில் B. பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1999.09.05 ஆந் திகதிய 350 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன.-

வடக்கு: மொஹொட்டிகே தோன லிலீனோன என்பவருக்கும் மற்றும் ஏனையோருக்கும் உரித்துடைய வயலை பிரிக்கும் வாய்க்கால்;
கிழக்கு: மொஹொட்டிகே தொன் எப்ரஹாம் அப்புஹாமி என்பவரின் காணி;
தெற்கு: பாதை;
மேற்கு: காணித்துண்டு 1 . மற்றும்

இக்காணியானது இரண்டு றூட் பதின்மூன்று தசம் இரண்டு பேர்ச் (00ஏ.02றூ.13.2பே.) விஸ்தீரணத்தையுடையது. இக்காணி யானது கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் P9 /35 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர்/பிரதி பிஸ்கால்.
சிவில் மேல் நீதிமன்றம்,
கொழும்பு.

2024, ஒற்றோபர் 15.

பிரதானபதிவாளர்/பிரதி பிஸ்கால்,
வாணிப மேல் நீதிமன்றம்,
கொழும்பு-12.

2024, ஒற்றோபர் 15.

11- 55

## பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்

### மாவட்ட நீதிமன்றம் ( கொழும்பு)

கொழும்பு 03, காலி வீதி, இல.450 எனும் நிரந்தர முகவரியையும் மற்றும் /அல்லது பிரதான வணிக வியாபாரத்தை நடாத்திச் செல்லும்,ராஜகிரிய, கோட்டை வீதி, இல. 468 எனும் முகவரியில் ''ராஜகிரிய கிளை'' என்று அறியப்படும் கிளை அலுவலகத்தைக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி. (Pan Asia Banking Corporation PLC)

*வழக்காளி*

வழக்கு இலக்கம் :
DMB/ 00081/ 2014
தன்மை: ஈடு
செயல்முறை:
முறையானது
பெறுமதி:
ரூபா 1,168, 935.26

- எதிராக-

1. லூசியஸ் ஜயந்த பர்னாந்து, இல. 1003/5, பூங்கா ஒழுங்கை, ராஜகிரிய.
2. மெலனி ராஜஸ்ரீ பர்னாந்து, இல. 1003/5, பூங்கா ஒழுங்கை, ராஜகிரிய.

*எதிராளிகள்*

மேற்குறிப்பிட்ட வழக்கின் 2018, செத்தெம்பர் 12 ஆந் திகதிய கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், வழக்காளியினால் எதிராளிகளிடமிருந்து தீர்ப்பின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணத்தொகையான,
ரூபா 2,204,842.82 பணத்தொகையானது 2013.07.01 ஆந் திகதியிலிருந்து ரூபா1, 680,000 பணத் தொகைக்கு 23% வருடாந்த வட்டியுடன் அப் பணத்தொகைக்கு மேலதிகமான மேலதிகப்பற்று வசதிக்கு 34% மேலதிக வட்டியும் வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து முழுத்தொகையை செலுத்தி முடிக்கும் வரை வழக்கின் முழுத்தொகைக்கான சட்டரீதியான வட்டியையும் எதிராளிகளிடமிருந்து வழக்காளிக்கு பெற்றுக்கொள்வதற்கு என்னால் தடை செய்யப்பட்ட ஈட்டுமுறி இல. 2250 இன் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை,

2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு என்னால் தடைசெய்யப்பட்ட அசையாச் சொத்து அமைந்துள்ள இல.201, யட்டிநுவர கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மாமுடாவெல எனும் இடத்தில் அமைந்துள்ள ''தெனியேஅரம்ப'' எனும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியானது என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

#### மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர, மாமடாவெல எனும் இடத்தில் அமைந்துள்ள ''தெனியேஅரம்ப'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் M.W.A.B. கிரிதென அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1988.03.25 ஆந் திகதி வரைபட இல. 3505 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு ''1'' மற்றும் ''2'' என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட மற்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்த காணித்துண்டுகளாகும். மேறிகுறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன:

வடக்கு: திஸ்ஸநாயக்க மற்றும் ஏனையோருக்கு உரித்துடைய நத்தரன்பொத்தே வத்த;
கிழக்கு: தெனியே அரம்ப எனும் ஆரியரத்ன என்பவருக்கு உரித்துடைய கிரிசந்துவகே காணி;
தெற்கு: பொது பாதை; மற்றும்
மேற்கு: குணசிங்க என்பவரிற்கு உரித்துடைய கொரொக் மெடில்லே வத்த .

மற்றும் இக்காணியானது ஒரு றூட் முப்பது பேர்ச் (00ஏ.01றூ.30பே.) விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.
பின்வரும் காணியானது கண்டிக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம்டீ/515/35 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரைபட இல. 3505 இன் காணித்துண்டுகள் 1 மற்றும் 2 என பிரித்து நிர்ணயிக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட மற்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்த காணித்துண்டுகளின் அண்மித்த மீளளவையின் பிரகாரம்,

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர, மாமடாவெல கந்துபிட்டயில் அமைந்துள்ள ''தெனியேஅரம்ப'' எனும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் T.B. அத்தநாயக்க அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2011.09.21 ஆந் திகதிய வரைபட இல. 214/ 11 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டு 1 ஆகும். இக்காணியின் எல்லைகளாவன:

வடக்கு: திஸ்ஸாநாயக்க மற்றும் ஏனையோருக்கு உரித்துடைய நத்தரன்பொத்தே வத்த;
கிழக்கு: தெனியே அரம்ப எனும் ஆரியரத்ன என்பவருக்கு உரித்துடைய கிரிசந்துவகே காணி;
தெற்கு: பொது பாதை, மற்றும்;
மேற்கு: குணசிங்க என்பவரிற்கு உரித்துடைய கொரொக் மெடில்லே வத்த.

மற்றும் இக்காணியானது ஒரு றூட் இருபத்தைந்து பேர்ச்( 0ஏ.1றூ.25பே.) விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

A.A.N.C. அலுத்கம,
பதிவாளர்/பதில் பிஸ்கால்.
மாவட்ட நீதிமன்றம், கண்டி.

2024, செத்தெம்பர் 19.

11- 56

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **அட்டவணை - 2024** | | | | |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2024 |
| | | வெள்ளி | 08.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2024 |
| | | வியாழன் | 14.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2024 |
| | | வெள்ளி | 22.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2024 |
| | | வெள்ளி | 29.11.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.11.2024 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2024 |
| | | வெள்ளி | 13.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2024 |
| | | வெள்ளி | 20.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2024 |
| | | வெள்ளி | 27.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2024 |
| | | | **அட்டவணை - 2025** | | | | |
| **சனவரி** | .. | வெள்ளி | 03.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2024 |
| | | வெள்ளி | 10.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2024 |
| | | வெள்ளி | 17.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2025 |
| | | வெள்ளி | 24.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2025 |
| | | வெள்ளி | 31.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2025 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.